திரு. கா. காளிமுத்து: மாநில அளவில் அமைக்கப்பட்டிருக்கிற திட்டக் குழுவைப்பற்றி மைய அரசு அபிப்பிராயம் ஏதாவது தெரிவித்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாநில அரசுத் திட்டக் குழு அமைத்திருப்பதை மைய அரசு வரவேற்று இருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: மாநிலத் திட்டக் குழுபோன்று மாவட்ட ரீதியில் திட்டக் குழுவை அமைத்து, அவர்களது ஆலோசனைகளையும் கேட்டு மாநிலத் திட்டக் குழு அரசுக்கு ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திட்டங்கள் உச்சியில் இருந்து போடப்படாமல் அடியில் இருந்து போடப்பட வேண்டுமென்ற அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் மாவட்ட அளவிலும் இன்னும் வட்ட அளவிலும், கிராம அளவிலும் தேவையான திட்டங்களைத் தேவையானவர்களுடன் மாநிலத் திட்டக் குழுவினர் ஆராய வேண்டுமென்ற அடிப்படையில் இது அமைக்கப்பட்டிருக்கிறது. மாவட்டங்களுக்கென்று தனித்தனி குழுக்கள் போடப்படாவிட்டாலும் திட்டக் குழுவில் உள்ளவர்கள் மாவட்ட அளவில் பரிசிலனை செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எம். தேவராசன் : மாநில அளவில் திட்டக்குழு அமைக்கப்பட்டிருப்பதை மைய அரசு வரவேற்று இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, இதற்கு மத்திய அரசிடம் இருந்து நிறையப் பொருள் எதிர்பார்க்கலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எதிர்பார்க்கலாம்.

மதுவிலக்குப் பிரச்சாரம்

*397 வினா—**திரு. எம். முத்தையா**
திரு. கே. எ. வகாப் மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் மது அருந்துவதின் தீமைகளை எடுத்துக் காட்ட ஒரு பிரச்சாரக் குழு அமைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(உ) அக் குழுவில் பணியாற்றுபவர்களுக்கு ஊதியம் ஏதேனும் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) தமிழ்நாடு அரசு அமைக்கவில்லை.

(இ) & (உ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1971 டிசம்பர் 15]

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, இந்தமாதிரிக் குழுவை அமைத்தால் அதில் உள்ள நன்மை தீமையைப்பற்றி எடுத்துச் சொல்லிப் பிரச்சாரம் செய்ய வசதியாக இருக்கும். அதற்கு இந்தக் குழுவை அமைக்க நமது முதல் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நன்மை தீமை இரண்டையும் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. மதுவினால் ஏற்படுகிற தீமையைச் சொன்னால் போதும்.

திரு. கே. எ. வகாப் : அரசுச் சார்பில் இந்தக் குழு அமைக்கப் படவில்லை. அரசுச் சார்பில் அமைக்கப்பட்டால் அதில் தமிழகத்து அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் ஏனையோரும் கலந்து பிரச்சாரத்தில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டதோ ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மதுவின் தீமையைப் பற்றி நாம் எடுத்துச்சொல்லிக்கொண்டு வருகிறோம். மதுவிலக்குச் சட்டத்தை ஒத்திவைத்த நேரத்தில் மதுவின் தீமைகளை உணர்ந்துதான் நாட்டின் சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்க நேரிடுவதுபற்றிச் சொல்லியிருக்கிறோம். இன்றைக்கு அரசாங்கச் சார்பில்தான் இதன் தீமைகளை எடுத்துப் பிரச்சாரம் செய்ய வேண்டுமா என்பது யோசிக்கப்பட வேண்டும்.

திரு. நா. வீராசாமி: சர்க்கார் சார்பில் மதுவின் தீமைகளை எடுத்துப் பிரச்சாரம் செய்வதற்குக்குழு அமைக்கப்படவில்லை என்றாலும் திராவிட முன்னேற்றக்கழகம் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்திருக்கிறதே, அதைக்கூட எதிர்க்கட்சிகள் கிண்டல் செய்கிறார்களே, அதைப்பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது அவர்களுக்குள்ள உரிமை.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு அங்கத்தினர் திரு.எம்.ஜி.ஆர். குழு செயல்பட்டுக்கொண்டிருக்கிறதா ? அதனை அரசாங்கம் அங்கீகரித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அங்கீகரிப்பது என்பது வேறு. ஆதரிப்பது என்பது வேறு. அந்தக் குழு செயல்பட்டு வருகிறது. எந்தக் கட்சியின் சார்பில் இதுபோன்ற பிரச்சாரக் குழுக்கள் அமைக்கப்பட்டாலும் அதை இந்த அரசாங்கம் ஆதரிக்கும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: பிரச்சாரக் குழுக்கள் அமைப்பதைவிட சினிமாத்துறையின் மூலமாக இதன் தீமைகளைப் படம் எடுத்துக் காட்டினால் மக்களுக்கு நன்றாகப் புரியும். அப்படிப்பட்ட பிரச்சாரப்படம் எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மக்களைக் கவரத்தக்க வகையில் எந்த, எந்தத் துறைகளை எல்லாம் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அந்த அந்தத் துறைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு. கே. என். குமாரசாமி: மதுவினுடைய தீமைகளைப்பற்றி எடுத்து விளக்கும் போஸ்டர்களை எல்லாம் மதுக்கடைகளுக்குப் பக்கத்தில் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபோன்ற போர்டுகளை வைக்க வேண்டாம். மது அருந்திக் கஷ்டப்படுகிறவர்களைக் கடைகளின் அருகில் பார்த்தாலே அதன் தீமைகளை உணர்ந்து கொள்ளலாம்.

* 398 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state whether there are proposals under the consideration of the Government to enlist the services of religious heads for propagating prohibition?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. என். டென்னிஸ்: மதத் தலைவர்கள் இப்பணியில் ஊதியத்தை எதிர்பார்க்காமல் ஈடுபடுவார்கள். ஆகவே அரசு அவர்களது சேவையைப் பயன்படுத்திக் கொள்ள அவர்களை அழைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சேவை என்பது அவர்களாக முன் வந்து ஆற்ற வேண்டிய ஒன்று. கோரிப்பெறுவது அல்ல. அவர்கள் அதுபோன்ற சேவையில் ஈடுபடத்தாமே முன்வருவார்களானல், அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யும்.

* 399 வினு—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா:

மதுவிலக்கு அமலுக்கு வருவதற்கு முன்பு, அரசு ஒரு ஆண்டிற்குப் பெற்று வந்த கலால் வரி எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இம்மாநிலத்தின் எப்பகுதியிலும் மதுவிலக்கு செயலில் இல்லாத காலத்தில், ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தில் 1945-46-ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை மூலம் கிட்டிய மொத்த வருவாய் ரூபாய் 15.9 கோடி ஆகும். இதில் கன்னியாகுமரி மாவட்டம் தவிர, தற்போதைய தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களின் ஆயத்தீர்வை வருவாய் 1945-46-ல் ரூபாய் 9.46 கோடி ஆகும்.

திரு. கே. எ. வகாப் : மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்ட பிறகு இப்போது வருகிற வருமானம் அரசு எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.